# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.124/2016

2026 –ம் ஆண்டு மார்ச் மாதம் 09 –ம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியின் பி.சா.4 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 09.03.2026**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. அரவிந்தன் (DW–4) | வயது | : | 34 /2026 |
| க/த பெயர் | : | திரு. கேசவன் | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | ரெங்கநாதபுரம் | வட்டம் | : | மன்னார்குடி |

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நிருபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை படித்து பார்த்துதான் கையெழுத்திட்டேன் என்றால் சரிதான், அதில் உள்ள விபரங்கள் எனக்கு படித்து பார்த்தால்தான் தெரியும். அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற வார்த்தைகளை என்னால் சொல்லமுடீயாது என்றால் சரிதான். கிரய ஒப்பந்தத்தில் வசந்தாவோ ராஜேஷ்வரியோ கையெழுத்திட்டதாக சொல்லவில்லை என்றால் சரிதான். யார் யார் கையெழுத்திட்டதை பார்த்ததாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் நானும், தமிழரசன் மற்றும் ரெங்கநாதபுரத்தை சேர்ந்த வேறு ஒருத்தரும் கையெழுத்திட்டதை பார்த்ததாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.
2) எந்த தேதி எந்த மாதம் எந்த வருடம் அந்த ஆவணம் எழுதப்பட்டது என்றால் அதுப்பற்றி தெரியாது. சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களான தாவா சொத்திற்கான என்ன பத்திரத்தை பார்த்தேன் என்றால் பார்க்கவில்லை. தாவா சொத்துக்களை கிராம நிர்வாக அலுவலகத்தில் பார்த்தபோது வசந்தா , ராஜேஷ்வரி பெயரில் தான் இருந்தது என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் தொடர்பாக வசந்தா மகன் தான் ஒப்பந்தம் எழுதியதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான்.
3) இந்நாள்வரை தமிழரசனிடம் தாவா சொத்துக்களை பிரதிவாதிகளிடம் விற்பனை செய்து தராதது தொடர்பாக கேட்டோமா என்றால் நான் கேட்கவில்லை, மற்றவர்கள் கேட்டார்கள். தமிழரசன் கையெழுதிட்ட பத்திரத்தில் உள்ள விபரங்களை யார் எழுதியது என்றால் தமிழரசனும் கண்ணனும் சொல்லி எழுதப்பட்டது. எந்த தேதியில் பத்திரம்

வாங்கப்பட்டது என்றால் பேசி முடிக்கப்பட்டதும் அதன் பிறகுதான் பத்திரம் வாங்கி அன்றைய தினம் எழுதப்பட்டது.

4) 19.07.2007 இல் தான் ஒப்பந்தம் ஏற்பட்டதாக பி.சா.ஆ.1 ஆவணம் உள்ளது என்றால் சரிதான். வாதியின் சொத்தை அபகரிக்க பிரதிவாதிக்கு சாதகமாக செயல்பட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்காக பி.சா.ஆ.1 ஆவணம் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.12 19:00:32 +0530

District Munsif
Mannargudi.